## தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம்

## இளநிலை மாணவர் சேர்க்கை 2025–2026

## நேரடி மாணவர் சேர்க்கை II (Spot Admission II)

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் உறுப்புக் கல்லூரிகளில் (சுயநிதிப் படிப்புகள்) காலியாக உள்ள இடங்களை நிரப்புவதற்கான **நேரடி மாணவர் சேர்க்கையானது (Spot Admission II)** 30.09.2025 செவ்வாய்கிழமை அன்று தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினத்தில் நடைபெற உள்ளது.

### நேரடி சேர்க்கை நடைபெறும் விதம்

- நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்களின் வருகையைப் பதிவுசெய்து மதிப்பெண் அடிப்படையில் தரவரிசைப்படுத்தப்பட்டு சேர்க்கை நடைபெறும்.
- கலந்து கொள்ள விரு பமுள்ள மாணவர்கள் குறிப்பிட்ட தேதி மற்றும் இடத்தில் நேரடியாக வந்து பங்கேற்க வேண்டும்.

### நேரடி சேர்க்கைக்கான விண்ணப்பக் கட்டண விவரம்:

- இந்த நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் www.suppladmission.tnjfu.ac.in என்ற இணையதள முகவரி வாயிலாக விண்ணப்பித்து, SC/SCA/ST மாணவர்கள் – ரூ. 150/– மற்றும் பிற பிரிவினர் – ரூ. 300/– விண்ணப்பக் கட்டணமாக செலுத்த வேண்டும்.

### நேரடி சேர்க்கைக்கான நிபந்தனைகள்

- இந்தச் சேர்க்கை பல்கலைக்கழகத்தில் உள்ள உறுப்புக் கல்லூரிகளில் உள்ள சுயநிதி தொழிற்கல்விப்படிப்புகள் [B.Tech (Food Technology) and B.Tech. (Biotechnology) மற்றும் தொழிற்சார் கல்விப்படிப்புகளில் (B.Voc. Courses) உள்ள இடங்களுக்கே பொருந்தும்.
- நேரடி சேர்க்கையில் கலந்துகொண்டு இடம் கிடைக்கப்பெற்ற மாணவர்களிடமிருந்து கலந்தாய்வுக் கட்டணம் (SC/SCA/ST பிரிவினருக்கு ரூ. 100/– மற்றும் இதரப் பிரிவினருக்கு ரூ. 200/–) மற்றும் சேர்க்கைக் கட்டணம் (ரூ. 10,000/–) உடனடியாக இணையதளம் வாயிலாக வசூலிக்கப்படும்.
- நேரடி சேர்க்கையின் மூலம் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு கிடைக்கப்பெற்ற இடம் தவிர மாற்று வாய்ப்பு வழங்கப்படமாட்டது.

### யார் கலந்து கொள்ளலாம்?

- பல்கலைக்கழகத்தின் மூலம் வெளியிடப்பட்டுள்ள இளநிலை பட்டப்படிப்புகளுக்கான காலியிடங்களில் படிக்க தகுதியுள்ள மாணவர்கள் அனைவரும் துணைச் சேர்க்கைக்கான விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து கலந்துகொள்ளலாம்.
- மேலும், பொது கலந்தாய்வில் இடம் கிடைக்கப்பெற்று கலந்தாய்வினை தவறவிட்டவர்கள், இடம் கிடைக்கப்பெற்றும் சான்றிதழ்களை சமர்ப்பிக்காதவர்கள்

மற்றும் முந்தைய கலந்தாய்வுகளில் பங்கேற்காதவர்கள் மறுமுறை சேர்க்கைக்கான (துணை) விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து கலந்துகொள்ளலாம்.

### யார் கலந்து கொள்ள முடியாது?

- முந்தைய கலந்தாய்வுகளின் மூலம் இந்த ஆண்டு இடம் பெற்று ஏற்கனவே இப்பல்கலைக்கழகத்தின் உறுப்பு மற்றும் தனியார் இணைப்புக் கல்லூரிகளில் சேர்க்கை பெற்றவர்கள்.

### கல்விக் கட்டண விவரம்:

| இளநிலை படிப்புகள் | முதல் பருவம் (ரூபாய்) | 2ம் பருவம் (ரூபாய்) | ஆண்டிற்கான கட்டணம் (ரூபாய்) |
|---|---|---|---|
| **நான்கு ஆண்டு இளநிலை படிப்புகள்** | | | |
| பி.டெக். (உயிர்தொழில்நுட்பவியல்)<br>B.Tech. (Biotechnology) | 56,075 | 51,150 | 1,07,225 |
| பி.டெக். (உணவுத் தொழில்நுட்பவியல்)<br>B.Tech. (Food technology) | 56,075 | 51,150 | 1,07,225 |
| பி.பி.ஏ. (மீன்வள வணிக மேலாண்மை)<br>BBA (Fisheries Entreprises Management) | 56,075 | 51,150 | 1,07,225 |
| **மூன்று ஆண்டு இளநிலை தொழிற்கல்வி படிப்புகள்** | | | |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்பதப்படுத்தும் தொழில்நுட்பம்)<br>B.Voc. (Industrial Fish Processing Technology) | 10,700 | 8,350 | 19,050 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்வளர்ப்பு)<br>B.Voc. (Industrial Aquaculture) | 10,700 | 8,350 | 19,050 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்பிடித் தொழில்நுட்பம்)<br>B.Voc. (Industrial Fishing Technology) | 10,700 | 8,350 | 19,050 |

### நேரடி சேர்க்கைக் கலந்தாய்வு (Spot Admission II) நடைபெறும் நாளில் பின்பற்ற வேண்டியவை

- நேரடி சேர்க்கைக்கான கலந்தாய்வில் கலந்துகொள்ள விருப்பமுள்ள மாணவர்கள் www.suppladmission.tnjfu.ac.in என்ற இணையதளத்தில் நேரடிக் கலந்தாய்வில் கலந்துகொள்வதற்கான விண்ணப்பத்தை பூர்த்தி செய்து சான்றிதழ்களை 30.09.2025 காலை 08.00 மணிக்குள் பதிவேற்றம் செய்து கலந்தாய்வில் கலந்துகொள்ள வேண்டும். பூர்த்தி செய்த விண்ணப்பத்தின் நகலையும், அசல் சான்றிதழ்களையும் நேரடி சேர்க்கை நடைபெறுவதற்கான நாளான 30.09.2025 அன்று கொண்டுவந்து கலந்துகொள்ளவும். கலந்தாய்வு குறித்த எந்தவொரு தகவலும் மாணவர் சேர்க்கைக்குழுவின் மூலம் தங்களுக்கு மின்னஞ்சல்/அலைபேசி வாயிலாக தெரியப்படுத்தப்படாது.

- பல்கலைக்கழக உறுப்புக் (சுயநிதி படிப்புகள்) கல்லூரிகளுக்கான உணவு மற்றும் தங்குமிடக் கட்டண விவரங்களை (தேவையெனில்) கல்லூரிகளில் நேரடியாக தொடர்புகொண்டு அறிந்து கொள்ளலாம்.

- நேரடி கலந்தாய்விற்கு வருகை தரும் மாணவர்களின் வருகையை பதிவு செய்தபின் தரவரிசை நிர்ணயிக்கப்படும்.
- குறிப்பிடப்பட்டுள்ள காலியிடங்களின் எண்ணிக்கை தற்காலிகமானது மற்றும் மாறுதலுக்கு உட்பட்டது.
- தரவரிசை அடிப்படையில் மாணவர்களுக்கு கல்லூரி மற்றும் படிப்பு ஒதுக்கப்படும்.
- நேரடி கலந்தாய்வின் போது, மதிப்பெண் அடிப்படையில் கல்லூரிகளில் அனைத்து இடங்களும் நிரப்பப்பட்டவுடன், தேவை ஏற்படின் காத்திருப்பு பட்டியல் உருவாக்கப்படும்.
- நேரடி கலந்தாய்வில் கலந்துகொள்ளும் மாணவர்களுக்கு இடம் கிடைக்கும் என்ற உறுதி அளிக்க இயலாது.

**காலியிட விவரங்கள்**

கலந்தாய்விற்கான காலியிட விவரங்கள் கீழ்கண்டவாறு:

| இளநிலைப் படிப்புகள் | காலியிடங்கள் |
|---|---|
| பி.டெக். (உயிர்தொழில்நுட்பவியல்)<br>B.Tech. (Biotechnology) | 15 |
| பி.டெக். (உணவுத் தொழில்நுட்பவியல்)<br>B.Tech. (Food technology) | 3 |
| பி.பி.ஏ. (மீன்வள வணிக மேலாண்மை)<br>BBA (Fisheries Entreprises Management) | 13 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்பதப்படுத்தும் தொழில்நுட்பம்)<br>B.Voc. (Industrial Fish Processing Technology) | 4 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்வளர்ப்பு)<br>B.Voc. (Industrial Aquaculture) | 3 |
| இளநிலை தொழிற்கல்வி (தொழில்துறை மீன்பிடித் தொழில்நுட்பம்)<br>B.Voc. (Industrial Fishing Technology) | 15 |

நேரடி சேர்க்கைக்கான விண்ணப்பங்கள் 25.09.2025 அன்று மாலை முதல் www.suppladmission.tnjfu.ac.in என்ற இணையதளத்தில் வெளியிடப்படும்.

**மேலும் நேரடி சேர்க்கைக்கான கலந்தாய்வு குறித்து அலுவலக நேரமான காலை 10.00 முதல் மாலை 5.45 வரை கீழ்கண்ட தொலைபேசி/அலைபேசியில் தொடர்பு கொள்ளவும்:**

தொலைபேசி: 04365-211090 அலைப்பேசி: 81221 44031

மின்னஞ்சல்: admissionug@tnfu.ac.in

**தலைவர்**

இளநிலை மாணவர் சேர்க்கை 2025-26

தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா

மீன்வளப் பல்கலைக்கழகம், நாகப்பட்டினம் – 614 712.